திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் (2025– 2026) போட்டிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பல்வேறு போட்டிகளை பார்வையிட்டார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ. கிருஷ்ணசாமி , டி.ஜே.கோவிந்தராஜன் , துரை சந்திரசேகர், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர் மன்றத் துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் /இணை இயக்குநர் வை.ஜெயகுமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் சேதுராஜன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயன மனுக்கள் தீர்வின் ஆவணங்கள் வழங்கினார்!

சென்னை, ஆக.27-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக் காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6 வார்டு68 சென்னை, கொளத்தூர் பெரியார் நகர் கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நேற்று (26.8.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..15 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 320 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 40 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 2 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 5 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 58 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 394 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை 2 விண்ணப்பம்

பெறப்பட்டு தீர்வு கண்டும் கலைஞர் மகளிர் உரிமை தொகை 1226 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் இதர மனுக்கள் 100 என மொத்தமாக 2540 மனுக்கள் பெறப்பட்டு அதில் 2532 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், அமுதா பொன்னிவளவன் எம்.சி., புனிதவதி எதிராஜன், செயல் பொறியாளர் சரவணன், வட்ட கழக செயலாளர்கள் கே.பி. ஆதவன், மணி, பி.டி.சி. ரவி மற்றும் 68, 68அ வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை முன்னிட்டு தாம்பரம் தொகுதிக்குட்பட்ட வள்ளுவர் குருகுலம் பள்ளியில் மாநகர செயலாளர்,எஸ்.ஆர்.ராஜா.எம்எல்ஏ., பள்ளி மாணவ மாணவிகளுடன் காலை உணவருந்தினார். உடன் மாமன்ற உறுப்பினர்கள் சி.சுரேஷ், எல்.பெரியநாயகம், வட்ட செயலாளர்கள் மு.வினோத், ரெ.ஜீவன்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் வீ.கார்த்திக், மாநகர பிரதிநிதி மா. கன்னியப்பன், வை.தங்கராஜ், எம்.குத்துஸ்கனி, மு.சூர்யா அரசு உயர் அலுவலர்கள், பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

வேளச்சேரியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மனுக்கள் மீது உடனடி தீர்வு! சான்றிதழ்கள் வழங்கினார்!

சென்னை, ஆக.27

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.08.2025) சென்னை, வேளச்சேரி, 100 அடி சாலையில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடித் தீர்வுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

பிறகு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம் தமிழ்நாட்டில் முதல் மைச்சர் அவர்கள் தினந்தோறும் ஒவ்வொரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழ் நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் அடிப்படைத் தேவைகளையும், வாழ்வாதார தேவைகளையும் உடனடியாக நிறைவேற்றி வருகிறார்கள். ஏராளமான திட்டங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்றான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிகளில் 6232 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. ஊரகப்பகுதிகளில் 46 வகையான சேவைகள், 15 துறைகளின் வாயிலாக நடத்தப்படவிருக்கிறது.

அதேபோல் நகர்ப்புறப் பகுதிகளைப் பொறுத்தவரை 3768 முகாம்கள் 43 வகையான சேவைகள் 13 துறைகளின் வாயிலாக வழங்க இருக்கிறது. அந்தவகையில் இந்த முகாம்களை பொறுத்தவரை கடந்த ஜூலை திங்கள் 15ஆம் தேதி பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில் சிதம்பரம் நகராட்சியில் முதலமைச்சர் அவர்கள் இந்த சீரிய திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இந்த திட்டம் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 14 வரை 3561 முகாம்கள் நடத்தப்படும் என்றும், ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 14 வரை 2859 முகாம்களும், செப்டம்பர் 15 தொடங்கி அக்டோபர் 14 வரை 2773 முகாம்களும், அக்டோபர் 15 முதல் நவம்பர் 14 வரை 807 முகாம்கள் என ஆக மொத்தம் 10,000 முகாம்கள் வரை நடத்தப்படவிருக்கிறது.

இதுவரை தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ள முகாம்களின் எண்ணிக்கை 4,419 ஆகும். ஏறத்தாழ 45% முகாம்கள் நடைபெற்றுள்ளது. இதுவரை நடைபெற்றுள்ள முகாம்களில் 36,49,399 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கு உடனடி தீர்வும், தீர்வு காண முடியாத மனுக்களுக்கு விளக்கமும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இன்று பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை முதற்கட்டமாக 109 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு, 109 முகாம்களும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட முகாம்கள் என்கின்ற வகையில் 19.08.2025 முதல் 14.09.2025 வரை 148 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் சென்னையில் மட்டுமே நடத்தப்பட்டு இருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 152. இந்த முகாம்களில் சென்னையில் மட்டுமே பெறப்பட்டிருக்கின்ற மனுக்களின் எண்ணிக்கை 3,40,689. பொது மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு அவரவர் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற வகையில் இந்த முகாம்களுக்கு வருகிறார்கள். இந்த முகாம்கள் நடைபெறுகின்ற அனைத்து இடங்களிலும் மாற்றுத் திறனாளிகள் எளிதாக பயன்பெறும் வகையில் தன்னார்வலர்களும், மூன்று சக்கர வாகனங்களும் தயார்நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது.

இந்த முகாம்கள் நடத்தப்படுகின்ற இடங்களில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த முகாம்களில் மக்களின் தேவைகளுக்காக அவர்களும் இந்த முகாம்களில் வெற்றிகரமாக நடைபெற உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில் இன்று வேளச்சேரி பகுதியில் இந்த முகாம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த முகாமில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்நிகழ்வில் வே.ஆனந்தம் எம்.சி. முன்னணியினர் உடனிருந்தனர்.

தி.மு.க. வர்த்தகர் அணி

சென்னை தென்மேற்கு மாவட்ட பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசிமுத்து மாணிக்கம் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. வர்த்தகர் அணியின் பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

சென்னை தென்மேற்கு மாவட்டம்

மயிலாப்பூர் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - கே.முரளி காமராஜர் சாலை, நாராயணசாமி தோட்டம், சென்னை - 28.

துணை அமைப்பாளர்கள் - 1) டி.துரைசாமி எண்.10, தர்மராஜா கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 04. 2) பசுபதி பிரகலாதன் எண்.48, 4வது தெரு, அன்னை சத்தியா நகர், ஆர்.ஏ.புரம், சென்னை - 28. 3) மார்க்கெட் ஆர்.சுரேஷ் மாதவ பெருமாள் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 04. 4) எஸ்.வேல்ராஜ் எண்.6, சிறுங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை - 28. 5) கே.குமரேசன் எண்.5, கயிலாசபுரம், மயிலாப்பூர், சென்னை - 04. 6) கே.பிரபாகரன் 16/48, வி.சி. கார்டன் முதல் தெரு, மந்தவெளி, சென்னை - 28. 7) சுனில் ஜோஷி எண். 21, சீனிவாசபுரம், பட்டினம்பாக்கம், சென்னை - 28. 8) பி. கோவிந்தன் வள்ளீஸ்வரன் தோட்டம், ஆர்.ஏ. புரம், சென்னை - 600028. 9) கே.கணேஷ்கந்தன் 11/7, ஜெத் நகர், மந்தவெளி, சென்னை - 600028. 10) டி. ஜெகதீஷ் 1/10, நாராயணசாமி தோட்டம் 2வது தெரு, கிரீன்வேஸ் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை - 600028.

மயிலாப்பூர் மேற்கு பகுதி

அமைப்பாளர் - ஜி.முத்து (எ) ராஜி எண்.177/1, திருவள்ளுவர் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 18.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜி.ரவிச்சந்திரன் எண்.20/3, 14வது தெரு, நந்தனம், சென்னை - 35. 2) ரா.வெங்கட்ராமன் எண்.60/47, 2வது தெரு, சிதம்பரம்சாமி தெரு, மயிலாப்பூர், சென்னை -4. 3) ஏ. பார்த்திபன் 69/ஏ, 3வது தெரு, லோட்டஸ் குடியிருப்பு, நந்தனம், சென்னை - 600035. 4) டி.சிலம்பரசன் எண்.9, 'ஓய்' பிளாக் விசாலாட்சி தோட்டம், மயிலாப்பூர், சென்னை - 04. 5) பி.ஜி. சரவணன் எண்.96/99, ரங்கூன் தெரு, சத்தியமூர்த்தி நகர், தேனாம்பேட்டை, சென்னை - 18. 6) டி.ஹரிதாஸ் எண்.12/166, ரோட்டரி நகர், 13வது தெரு, சென்னை - 05. 7) எஸ்.எம்.செல்லா எண்.15/25, பெரியார் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 18. 8) என். நடராஜன் எண்.6/15, வெங்கட்ராமன் தெரு, தேனாம்பேட்டை, சென்னை -18. 9) ஆர்.சிவபிரகாஷ் எண்.52.4, ஆலையம்மன் கோவில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை -18. 10) டி. பிரகாஷ் பி-98, 6வது மாடி, ஆலையம்மன் கோவில் தெரு, சென்னை.

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - எல்.சீனிவாசன் 24, சித்தி விநாயகர் கோவில் தெரு, தியாகராயர் நகர், சென்னை.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆனந்தன் 31/77. 5வது மெயின் ரோடு, கிழக்கு சி.ஐ.டி. நகர், நந்தனம், சென்னை - 600035. 2) ஜெ. ஈஸ்வரன் 51/6, ஈஸ்வரன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை. 3) ஆ.முருகன் 3.3வது தெரு, எஸ்.எஸ்.பி நகர், வடபழனி, சென்னை. 4) பி.மிலிட்டரி செல்வம் 1/15, பிருந்தாவனம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை. 5) எஸ். தங்கராஜ் 2/6, 3வது பிரதான சாலை, சி.ஐ.டி நகர் கிழக்கு, நந்தனம், சென்னை -600035. 6) பிரேம்நாத் பைலட் எண். 7, 14வதுதெரு, அசோக் நகர், சென்னை-600083. 7) கே.அங்குசாமி 20/24, புது தெரு, கண்ணம்மாபேட்டை, தியாகராயர் நகர், சென்னை. 8) எஸ். ராஜா (எ) ராஜமாணிக்கம் 50/12, வனஜா இல்லம், 12வது அவின்யூ, அசோக் நகர், சென்னை - 600083. 9) கோ.ஆனந்தன் ஏ-பிளாக், 12, பி.டி.சி. குடியிருப்பு, 80வது தெரு, அசோக் நகர், சென்னை-83. 10) ஜே. சங்கீதா 79/37, கணபதி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600033.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி

அமைப்பாளர் - எம்.வெங்கடேசன் 21, பசுல்லா சாலை, தியாகராயர் நகர், சென்னை-17.

துணை அமைப்பாளர்கள் - 1) பி.ஜெயவேலு 33/19.6வது தெரு, காமராஜர் காலனி, கோடம்பாக்கம், சென்னை. 2) எம்.கிருஷ்ணன் 9/62, வன்னியர் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600024. 3) ஆர்.சுரேஷ்குமார் 17/29, நாகார்ஜுனா முதல் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 24. 4) ஜெ.முருகன் 7,ரங்கநாதன் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 17. 5) மகேந்திரன் 1, ஆனந்தி பிளாட், அக்பர் பாஷா 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை - 24. 6) தி.ஆனந்தன் 28/41, அழகர் பெருமாள் கோவில் தெரு, வடபழனி, சென்னை - 26. 7) மணிகண்டன் 31, நாகபிள்ளை தோட்டம், தி. நகர், சென்னை - 600017.

8) ஏ.வடிவேல் 51/4, மன்னார் 1வது தெரு, வடபழனி, சென்னை - 26. 9) கோ. பாபு 38/2, வெங்கட் நாராயணா ரோடு, தியாகராயர் நகர், சென்னை - 600017. 10) ஜி. ஆறுமுகம் 2/6, சின்ன ராஜிபிள்ளை தோட்டம், 3வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600024. 11) ஆர். ரங்கநாதன் 8, ராஜிபிள்ளை தோட்டம், தியாகராயர் நகர், சென்னை - 600017.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18 நாள்- 26-08-2025.

காசி முத்துமாணிக்கம் செயலாளர் தி.மு.க. வர்த்தகர் அணி

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கற்கோவில் இரா. இராமதாசு
ஆகஸ்ட் 27 (2017)

இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இரா.முருகேசன், டி.சி.வி.மணிகண்டன் முன்னிலையில்

திருவொற்றியூர் 8வது வட்டத்தில் காலை உணவு வழங்கும் திட்டம்!

டி.சி.வி.ராஜகுமாரி எம்.சி. தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.27

தாயுள்ளம் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நேற்று காலை உணவு வழங்கும் திட்டம் நகர்ப்புற பகுதிகளில் முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் எட்டாவது வட்டக் கழகத்தில் அமைந்துள்ள எம்.டி.எம். அரசு நிதி உதவி பெறும் ஆரம்பப் பள்ளியில் காலை உணவுத் திட்டம் எட்டாவது வட்டக் கழக சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி டி.சி.வி. ராஜகுமாரி விஜயன் துவைக்கி வைத்தார்.

இதில் தலைமை பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன், வட்டக் கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் முன்னிலையில் வடக்கு வட்டார கல்வி அலுவலர், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மற்றும் கழக முன்னோடிகள் மாவட்ட பிரதிநிதி ஒய் ரஜினி நந்தி, எ. அருளானந்தம், சுகந்தா முனுசாமி, சுப்பிரமணி, பாப்பாராம மூர்த்தி, கணேசன், தீபம் சங்கர் , அரங்கநாதன், மூர்த்தி, ஜோசப், அரவிந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

தி. மு. க. தொழிலாளர் அணி

மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 30.08.2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 12.9.2025 அன்று தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கூட்டம்.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18 நாள்- 25-08-2025.

பிடிசி ஜி.செல்வராஜ், செயலாளர், தி.மு.க. தொழிலாளர் அணி

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.ஆர். ராமதாஸ்
ஆகஸ்ட் 27 (2016)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.